## 2018 – 2019 +2 கணக்குப்பதிவியல் 2,3,5 - மார்க் வினா விடைகள்
## பாடம் 2. முழுமை பெறா பதிவுகளிலிருந்து கணக்குகள்

**1.ஒற்றைப் பதிவு முறை வரைவிலக்கணம்:** "ஒற்றைப்பதிவு முறை என்பது ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளின் பதிவுகளை மட்டுமே வைத்திருக்கும் கணக்குப் பதிவியல் முறையாகும். இது சூடிநநிலைக்கேற்றவாறு மாறக்கூடிய எப்பொழுதும் முழுமை பெறாத இரட்டைப் பதிவு முறையாகும்."" **-- கோஹ்லர்**

**2.முழுமை பெறாத பதிவேடுகள்:** ஒற்றைப் பதிவு முறை பயன்படுத்தும் நிறுவனங்களில் பராமரிக்கப்படும் ஏடுகள்முழுமைபெறாதபதிவேடுகள் ஆகும்.இதில்ரொக்கம் மற்றும் ஆள்சார்கணக்குகள் மட்டுமே பதியப்படுகின்றன.

**3..நிலையறிக்கை:** ஒற்றைப்பதிவுமுறையில் முதலினை கண்டறிய தயாரிக்கபடுவதாகும் இது இருப்புநிலைக்குறிப்பு போன்றது. இது நிகர மதிப்பு முறை அல்லது முதல் ஒப்பீட்டு முறை எனவும் அழைக்கப்படுகிறது.

**4.மாற்றுதல் முறை:** ஒற்றை பதிவு முறையில் உள்ள பதிவுகளைக் கொண்டு வியாபாரக் க/கு, இலாபநட்ட க/கு தயாரிக்கப்படுவது மாற்றுதல் முறையாகும்.

**5. சரிக்கட்டப்பட்ட இறுதி முதல்** = இறுதி முதல் + எடுப்பு - ஆண்டு இடையில் இடப்பட்ட கூடுதல் முதல்

### 6. நிலை அறிக்கை முறையின் நிலைகள் (Steps):

**நிலை 1** → தொடக்க முதல் காணுதல் : ஆண்டுத் தொடக்கத்தின் நிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு தொடக்க முதல் கண்டறியப்பட வேண்டும்.சொத்துகள் மற்றும் பொறுப்புகளுக்கிடையேயான வேறுபாடு 'தொடக்க முதலாகும்.'

**நிலை 2** → இறுதி முதல் காணுதல் : ஆண்டு இறுதியின் நிலை அறிக்கை (அனைத்துச் சரிக்கட்டுகளுக்குப் பின்) தயாரிக்கப்பட்டு இறுதி முதல் கண்டறியப்பட வேண்டும்.

**நிலை 3** → இறுதி முதலுடன் எடுப்பு (ரொக்க எடுப்பு மற்றும் சரக்கு எடுப்பு) கூட்டப்பட வேண்டும்.

**நிலை 4** → மேற்கண்ட தொகையிலிருந்து கூடுதல் முதல் கழிக்கப்பட்டு, சரிக்கட்டப்பட்ட இறுதி முதல் கண்டறியப்பட வேண்டும்.

**நிலை 5** → சரிக்கட்டப்பட்ட இறுதி முதலிலிருந்து தொடக்க முதல் கழிக்கப்பட்டு இலாபம் அல்லது நட்டம் கண்டறியப்பட வேண்டும்.

### 7.ஒற்றைப் பதிவு முறையின் தன்மைகள் :

**1. தனி வாணிக நிறுவனங்கள் மற்றும் கூட்டாண்மை நிறுவனங்களுக்கு மட்டும் ஏற்றது** : தனி வாணிக நிறுவனங்கள் அல்லது கூட்டாண்மை நிறுவனங்கள் மட்டுமே இம்முறையைப் பயன்படுத்துகின்றன. சட்ட நிபந்தனைகள் காரணமாக நிறுமங்கள் ஒற்றைப் பதிவு முறையைப் பயன்படுத்துவதில்லை. **2. ஆள்சார் கணக்குகள் மற்றும் ரொக்கக் கணக்குகள் மட்டும் பராமரிப்பு** : இம்முறையில் ஆள்சார் கணக்குகள் மட்டுமே பராமரிக்கப்படுகின்றன. சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகளின் பராமரிப்பு தவிர்க்கப்படுகிறது. ஒரே ரொக்க ஏட்டில் தொழில் சார்ந்த மற்றும் சொந்த நடவடிக்கைகள் பதியப்படுகின்றன. **3. அனைத்து நடவடிக்கைகளும் பதியப்படுவதில்லை** : அனைத்து நடவடிக்கைகளும் கணக்கேடுகளில் பதியப்படுவதில்லை. சில நடவடிக்கைகள் கணக்கேடுகளிலும், சில நடவடிக்கைகள் நாட்குறிப்பிலும் பதியப்படுகின்றன. சில நடவடிக்கைகள் எதிலும் பதியப்படாமல், நினைவில் வைத்துக் கொள்ளப்படுகின்றன. **4. ஒழுங்கு முறையின்மை** : தனி நபர்களின் வசதிக்கேற்ப இரட்டைப் பதிவு முறை மாற்றியமைக்கப்படுவதால், அனைவருமே பயன்படுத்தும் வகையில் ஒழுங்கு முறை இல்லை. **5.ஆதார ஆவணங்களைக் கொண்டு தகவலகள் பெறுதல்** : தேவையான தகவல்களைப் பெறுவதற்கு உண்மையான சான்றுச் சீட்டுகளை சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. உதாரணமாக மொத்த கொள்முதல் அல்லது மொத்த விற்பனையை இடாப்பு நகல்களைக் கொண்டே அறிய முடிகிறது. **6. தோராய இலாபத்தை மட்டும் அறிதல்** : இம்முறையில் கணக்கிடப்படும் இலாபம் தோராயமானது ஆகும். இலாபத்தைத் துல்லியமாகக் கணக்கிட இயலாது. **7. உண்மையான நிதி நிலையை அறிய இயலாமை** : சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் பராமரிக்கப்படாத காரணத்தினால் உண்மையான நிதிநிலையை உணர்த்தும் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செடீநுய முடியாது. **8. வரி விதிப்பு அதிகாரிகளின் நிராகரிப்பு** : இம்முறையின் முழுமையின்மை, துல்லியமின்மை, ஒழுங்கின்மை காரணமாக வரிவிதிப்பு அதிகாரிகள் இம்முறையை நிராகரிக்கின்றனர்.

### 8. ஒற்றைப் பதிவு முறையின் குறைபாடுகள் :

**1. முழுமையற்ற மற்றும் விஞ்ஞான அடிப்படையற்ற முறை** : இம்முறையில் சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் பராமரிக்கப்படுவதில்லை. மேலும் அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள் பதியப்படுவதில்லை. எனவே இது ஒரு முழுமையற்ற முறையாகும். **2. இருப்பாய்வு தயார் செய்ய இயலாது** : பெரும்பாலும் நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள் பதியப்படாத காரணத்தால், கணக்கேடுகளின் சரித்தன்மையை அறிவதற்கான இருப்பாடீநுவை, இம்முறையில் தயார் செய்ய இயலாது. **3. தொழிலின் செயல்பாடு பற்றி அறிய இயலாது** : இம்முறையில் வியாபாரக் கணக்கு, இலாபநட்டக் கணக்கு மற்றும் இருப்புநிலைக் குறிப்பு போன்றவற்றைத் தயாரிக்க இயலாது. எனவே மொத்த இலாபம், நிகர இலாபம் மற்றும் விற்பனை மீதான நிகர இலாப விகிதம் போன்றவற்றை அறிய இயலாது. **4. உண்மையான நிதிநிலையை அறிய இயலாது** : இருப்புநிலைக் குறிப்பினை தயாரிக்க இயலாத காரணத்தால், நிறுவனத்தின் உண்மையான நிதிநிலையை அறிய இயலாது.

**5. முந்தைய ஆண்டுகளின் செயல்பாட்டினை ஒப்பீடு செய்ய இயலாது :** நடப்பு ஆண்டின் முழுமையற்ற தகவல்கள் மற்றும் முந்தைய ஆண்டுகளின் தகவல்கள் இல்லாமை போன்றவை காரணமாக முந்தைய மற்றும் நடப்பு ஆண்டுகளின் செயல்பாட்டினை ஒப்பிட முடியாது. நிறுவனத்தின் குறைகளை அறியவும், அவற்றை சரி செய்யவும் ஒப்பீடு அவசியமாகிறது. **6. வரி விதிக்கும் அதிகாரிகளின் நிராகரிப்பு :** வருமானவரி, விற்பனை வரி போன்ற வரிகளை விதிக்கும் அதிகாரிகள், வரி கணக்கிடுவதற்கு ஒற்றைப் பதிவு முறையை நிராகரிக்கின்றனர். **7. கடன் பெறுவதில் இடர்ப்பாடு :** வங்கிகள் மற்றும் இதர நிதி நிறுவனங்கள் ஒற்றைப் பதிவு முறையை ஏற்காத காரணத்தால், இம்முறையைப் பின்பற்றும் வியாபார நிறுவனங்கள் அவற்றிலிருந்து கடன் பெறுவது இயலாது.

**8. மோசடிகளைக் கண்டுபிடிப்பது சிரமம் :** இம்முறையில் மோசடிகளைக் கண்டுபிடிப்பது சிரமம். இது பணியாளர்களிடையே நேர்மையின்மையும், கவனக்குறைவையும் ஏற்படுத்தும். இதன் காரணமாக நிறுவனத்தில் ஊழல், மோசடி, நேர்மைக்குறைவு போன்றவை அதிகமாகக் கூடும். **9. வியாபார நிறுவனத்தின் உண்மை விலையை நிர்ணயிக்க இயலாமை :** உண்மையான இலாபம், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் மதிப்பை அறிய இயலாத காரணத்தால், வியாபார நிறுவனத்தை விற்க முற்படும் போது, உண்மையான விலையை நிர்ணயிக்க இயலாது.

**9. இரட்டைப் பதிவு முறைக்கும் ஒற்றைப் பதிவு முறைக்குமுள்ள வேறுபாடுகள்.**

| வ.எ. | அடிப்படை | இரட்டைப் பதிவு முறை | ஒற்றைப் பதிவு முறை |
|---|---|---|---|
| 1. | கொள்கை | ஒவ்வொரு பற்றுக்கும் நிகரான வரவும், ஒவ்வொரு வரவுக்கும் நிகரான பற்றும் உண்டு. | ஒவ்வொரு பற்றுக்கும் நிகரான வரவோ, ஒவ்வொரு வரவுக்கும் நிகரான பற்றோ இல்லை. |
| 2. | நடவடிக்கைகளின் பதிவு | அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள் பதியப்படுகின்றன. | அனைத்து நடவடிக்கைகளின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள் பதியப்படுவதில்லை. |
| 3. | பராமரிக்கப்படும் கணக்குகளின் இயல்பு | ஆள்சார், சொத்து மற்றும் பெயரளவுக் கணக்குகள் முழுமையாகப் பதிவு செய்யப்படுகின்றன. | ஆள்சார் மற்றும் ரொக்க நடவடிக்கைகள் மட்டுமே பதிவு செய்யப்படுகின்றன. எனவே இது ஒரு முழுமையற்ற முறை. |
| 4. | இருப்பாய்வு | கணக்குகளின் சரித்தன்மையை அறிய இருப்பாய்வு தயாரிக்க இயலும். | இருப்பாய்வு தயாரிக்க இயலாது. |
| 5. | இலாபம் அல்லது நட்டம் கணக்கீடு மற்றும் நிதி நிலை அறிதல். | நடவடிக்கைகள் முழுமையாகப் பதிவு செய்யப்படுவதால் இலாப நட்டக் கணக்கையும், இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிப்பது எளிது. | நடவடிக்கைகள் முழுமையாக பதிவு செய்யப்படாத காரணத்தால் இலாப நட்டக் கணக்கையும், இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்க இயலாது. |
| 6. | பொருத்தம் | அனைத்து வகைத் தொழில மைப்புகளுக்கும் இம்முறை ஏற்றது. | சிறு நிறுவனங்களுக்கு மட்டுமே இம்முறை ஏற்றது. |
| 7. | நம்பகத் தன்மை | இது விஞ்ஞான முறையிலான கணக்கேடுகள் பராமரிப்பு முறையாகும். | இது முழுமையற்றும், விஞ்ஞான அடிப்படையற்றும் இருத்தலால், இது ஒரு முறையே அல்ல. |
| 8. | ஏற்கும் தன்மை | வரி விதிப்பு, கடன் பெறுதல் போன்ற நோக்கங்களுக்கு இம்முறை ஏற்கப்படுகிறது. | வரி விதிப்பு, கடன் பெறுதல் போன்ற நோக்கங்களுக்கு இம்முறை ஏற்கப்படுவதில்லை. |
| 9. | அகத் தணிக்கை | .இம்முறையில் அகத் தணிக்கையை செயல்படுத்த இயலும். | இம்முறையில் அகத் தணிக்கையை செயல்படுத்த இயலாது. |

**10. இருப்பு நிலைக் குறிப்புக்கும் நிலை அறிக்கைகும் உள்ள வேறுபாடுகள்**

| வ.எ. | அடிப்படை | இருப்பு நிலைக் குறிப்பு | நிலை அறிக்கை |
|---|---|---|---|
| 1. | நோக்கம் | வியாபாரத்தின் நிதிநிலையை அறிவது | வியாபாரத்தின் முதலினை அறிவது |
| 2. | கணக்கியல் முறை | இரட்டைப் பதிவு முறை பின்பற்றப் படுகையில் இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கப்படுகிறது. | ஒற்றைப் பதிவு முறை பின்பற்றப்படுகையில் நிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது. |
| 3. | தயாரிப்பின் அடிப்படை | முழுவதும் பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையில் இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்கப்படுகிறது. | சில பேரேட்டுக் கணக்குகள் மற்றும் மதிப்பீடுகள் அடிப்படையில் நிலை அறிக்கை தயாரிக்கப்படுகிறது. |
| 4. | நம்பகத் தன்மை | .இருப்புநிலைக் குறிப்பு நம்பத் தகுந்தது. | நிலை அறிக்கை நம்பத் தகுந்தது அல்ல. |
| 5. | தகவல்கள் விடுபடுதல் | நடவடிக்கைகளின் இரு தன்மைகளும் முழுமையாகப் பதியப்படுவதால், தகவல்கள் விடுபட வாய்ப்பு இல்லை. | கணக்குகள் முழுமையற்று இருத்தலால் தகவல்கள் விடுபட வாய்ப்பு உண்டு. |

## 11.நிலை அறிக்கை மாதிரி படிவம்

| பொறுப்புகள் | தொகை ரூ. | சொத்துகள் | தொகை ரூ. |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | xxx | கை ரொக்கம் | xxx |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டுகள் | xxx | வங்கி ரொக்கம் | xxx |
| கொடுபட வேண்டிய செலவுகள் | xxx | பற்பல கடனாளிகள் | xxx |
| வங்கி மேல்வரைப் பற்று | xxx | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டுகள் | xxx |
| கடன் | xxx | சரக்கிருப்பு | xxx |
| **முதல் (இருப்பு கட்டும் தொகை)** | **xxx** | முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் | xxx |
| | | நிலைச் சொத்து | xxx |
| | | கடன் (ப.) | xxx |
| | **xxx** | | **xxx** |

## 12. இலாப நட்ட அறிக்கை (விடுபட்டதகவல்)

| | |
|---|---|
| இறுதி முதல் | XXX |
| (+) எடுப்பு | XXX |
| | XXX |
| (-) கூடுதல் முதல் | XXX |
| | XXX |
| (-) தொடக்க முதல் | XXX |
| இலாபம் / நட்டம் | XXX (அல்லது) |

| | | | |
|---|---|---|---|
| **இறுதி முதல்** | XXX | **தொடக்க முதல்** | XXX |
| **எடுப்பு** | XXX | **கூடுதல் முதல்** | XXX |
| **நட்டம்** | XXX | **இலாபம்** | XXX |
| | XXX | | XXX |

**13. மாற்றுதல் முறையின் நிலைகள் :**

**நிலை 1 → தொடக்க நிலை அறிக்கை** : தொடக்க முதலைக் காண்பதற்கு தொடக்க நிலை அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும்.

**நிலை 2 → மற்ற கணக்குகள்** : பிறகு 1) மொத்தக் கடனாளிகள் கணக்கும் , 2) மொத்தக் கடனீந்தோர் கணக்கும், கடன் விற்பனை, கடன் கொள்முதல், கடனாளிகள் மற்றும் கடனீந்தோரின் தொடக்கம் அல்லது இறுதி இருப்பைக் கண்டறியவும் தயாரிக்கப்பட வேண்டும்.

**நிலை 3 → மொத்த விற்பனை மற்றும் மொத்தக் கொள்முதல்** : மேற்கண்ட கணக்குகளைத் தயார் செய்த பிறகு 1. ரொக்க விற்பனையையும், கடன் விற்பனையையும் கூட்டி மொத்த விற்பனையைக் கணக்கிடுதல் வேண்டும். 2. ரொக்கக் கொள்முதலையும், கடன் கொள்முதலையும் கூட்டி மொத்தக் கொள்முதலைக் கணக்கிடுதல் வேண்டும்.

**நிலை 4 → இறுதிக் கணக்குகள்** : வியாபாரக் கணக்கும், இலாபநட்டக் கணக்கும், இருப்புநிலைக் குறிப்பும் தயாரிக்கப்பட வேண்டும்.

**ப. 14. மொத்தக் கடனீந்தோர் கணக்கு வ**

| விவரம் | தொகை ரூ | விவரம் | தொகை ரூ |
|---|---|---|---|
| ரொக்கம் செலுத்தியது | xxx | இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | xxx |
| தள்ளுபடி பெற்றது | xxx | **கடன் கொள்முதல் (இருப்பு கட்டும் தொகை)** | **xxx** |
| கொள்முதல் திருப்பம் | xxx | | |
| இருப்பு கீ/இ (இறுதி இருப்பு) | xxx | | |
| | xxx | | xxx |

**ப. 15. மொத்தக் கடனாளி கணக்கு வ**

| விவரம் | தொகை ரூ | விவரம் | தொகை ரூ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ (தொடக்க இருப்பு) | xxx | ரொக்கம் பெற்றது | xxx |
| **கடன் விற்பனை (இருப்பு கட்டும் தொகை)** | **xxx** | அளித்த தள்ளுபடி | xxx |
| | | விற்பனைத் திருப்பம் | xxx |
| | | இருப்பு கீ/இ (இறுதி இருப்பு) | xxx |
| | xxx | | xxx |

## பாடம் : 2 பயிற்சி வினாக்கள்

**I.கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு இலாபம், நட்ட அல்லது விடுபட்ட தகவல்களை கண்டறிக :**

1. தொடக்க முதல் 4,00,000, எடுப்பு 90,000, இறுதி முதல் 5,00,000, கூடுதல் முதல் 30,000
2. அவ்வாண்டு பெற்ற இலாபம் 4,800,கூடுதல் முதல் 4,000, எடுப்பு 2,400,தொடக்க முதல் 9,600,இறுதி முதல் ?
3. தொடக்க முதல் 1,60,000, இறுதி முதல் 1,80,000, எடுப்பு 36,000, கூடுதல் முதல் 10,000
4. இறுதி முதல் 32,000, எடுப்பு 4,800, கூடுதல் முதல் 8,000, அவ்வாண்டிற்குரிய இலாபம் 9,600
5. எடுப்பு இல்லாத நிலையில் இறுதி முதல் 91,000, தொடக்க முதல் 35,000,அவ்வாண்டிற்குரிய இலாபம் 14,000
6. இறுதி முதல் 1,63,800, கூடுதல் முதல் 42,300, எடுப்பு 25,200, நட்டம் 12,600
7. திரு.ராஜேஷ் ஒற்றைப் பதிவு முறையில் தனது கணக்கேடுகளை வைத்திருக்கிறார். அவர் கீழ்க்கண்ட தகவல்களைத் தருகிறார். 1.4.2003 அன்று முதல் 4,80,000, 31.3.2004 அன்று முதல் 5,40,000, நிதியாண்டில் எடுப்பு 1,50,000, நிதியாண்டில் கூடுதல் முதல் 90,000 திரு.ராஜேஷ் 2003-04ஆம் ஆண்டில் அடைந்த இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுக.
8. தொடக்க முதல் 24,000, அவ்வாண்டில் பெற்ற இலாபம் 9,000, கூடுதல் முதல் 12,000, இறுதி முதல் 39,000
9. எடுப்பு 50,000, கூடுதல் முதல் 10,000, தொடக்க முதல் 1,00,000, அவ்வாண்டின் இலாபம் 25,000
10. 1.4.1996 அன்று முதல் 30,000, 1996ல் கூடுதல் முதல் 6,000, 31.3.1997 அன்று முதல் 42,000, எடுப்பு 3,000
11. அவ்வாண்டில் பெற்ற இலாபம் 2,500, இறுதி முதல் 6,000, கூடுதல் முதல் 2,000, எடுப்பு 1,200
12. தொடக்க முதல் 15,000, அவ்வாண்டில் பெற்ற இலாபம் 8,000, இறுதி முதல் 20,000, எடுப்பு ?

**II. விடுபட்ட தகவல்களை நிரப்புக:**

| இறுதி முதல் ரூ | + எடுப்பு ரூ | + நட்டம் ரூ = | தொடக்க முதல் ரூ | + கூடுதல் முதல் ரூ | + இலாபம் ரூ |
|---|---|---|---|---|---|
| 1. 32000 | + 4800 | + -------- = | ---------------- | + 8000 | + 9600 |
| 2. 500000 | + 90000 | + ---------- = | 400000 | + 30000 | + --------- |
| 3. 91000 | + 0 | + ---------- = | 35000 | + ---------- | + 14000 |
| 4. 20000 | + ------- | + --------- = | 15000 | + 2000 | + 8000 |
| 5. ----------- | + 2400 | + ----------- = | 9600 | + 4000 | + 4800 |
| 6. 25000 | + 8000 | + ----------- = | 56000 | + 8000 | + --------- |
| 7. 22000 | + 5000 | + 3000 = | 12000 | + --------- | + --------- |

**III.1. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு மொத்தக் கொள்முதல் கணக்கீடு செய்யவும் :**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| ரொக்கக் கொள்முதல் | 17,000 |
| ஏப்ரல் 1, 2002 அன்று கடனீந்தோர் | 8,000 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 31,000 |
| கொள்முதல் திருப்பம் | 1,000 |
| மார்ச் 31, 2003 அன்று கடனீந்தோர் | 13,400 |

**2.கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு அவ்வாண்டிற்குரிய மொத்த விற்பனையைக் கணக்கிடுக.**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| 1.4.2002 அன்று பற்பல கடனாளிகள் | 20,400 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 60,800 |
| விற்பனை திருப்பம் | 5,400 |
| 31.3.2003 அன்று பற்பல கடனாளிகள் | 27,600 |
| ரொக்க விற்பனை | 56,800 |

**3. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு கடனாளிகள் மற்றும் கடனீந்தோரின் இறுதி இருப்புகளைக் கணக்கிடுக.**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| பற்பல கடனாளிகள் (1.4.2001) | 28,680 |
| பற்பல கடனீந்தோர் (1.4.2001) | 41,810 |
| கடன் கொள்முதல் | 1,51,400 |
| கடன் விற்பனை | 1,65,900 |
| பெற்ற தள்ளுபடி | 5,200 |
| அளித்த தள்ளுபடி | 4,800 |
| கொள்முதல் திருப்பம் | 7,440 |
| விற்பனைத் திருப்பம் | 6,444 |
| கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,50,536 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 1,43,765 |

4. **கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு கடன் விற்பனையைக் கணக்கிடுக :**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| பற்பல கடனாளிகள் - தொடக்க இருப்பு | 30,000 |
| ரொக்கம் பெற்றது | 2,05,000 |
| பற்பல கடனாளிகள் - இறுதி இருப்பு | 48,000 |
| அளித்த தள்ளுபடி | 13,000 |
| வாடிக்கையாளர் திருப்பிய சரக்கு | 14,000 |

5. **கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு கடன் கொள்முதல் கணக்கிடுக :**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| பற்பல கடனீந்தோர் - தொடக்க இருப்பு | 50,000 |
| பற்பல கடனீந்தோர் - இறுதி இருப்பு | 60,000 |
| அளித்த ரொக்கம் | 2,65,000 |
| பெற்ற தள்ளுபடி | 15,000 |
| கொள்முதல் திருப்பம் | 20,000 |

6. **தேவையான கணக்குகளைத் தயார் செய்து மொத்தக் கொள்முதல் மற்றும் மொத்த விற்பனை காண்க :**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| பற்பல கடனாளிகள் - தொடக்க இருப்பு | 50,000 |
| பற்பல கடனீந்தோர் - தொடக்க இருப்பு | 30,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 3,00,000 |
| பெற்ற தள்ளுபடி | 1,500 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 20,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| உள் திருப்பம் | 6,000 |
| வெளித் திருப்பம் | 8,000 |
| பற்பல கடனாளிகள் - இறுதி இருப்பு | 35,000 |
| பற்பல கடனீந்தோர் - இறுதி இருப்பு | 25,000 |
| ரொக்கக் கொள்முதல் | 12,000 |
| ரொக்க விற்பனை | 24,000 |

7. **கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு கடன் விற்பனை காண்க :**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| தொடக்க பற்பல கடனாளிகள் | 50,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 80,000 |
| பற்பல கடனாளிகளுக்கு அளிக்கப்பட்ட தள்ளுபடி | 2,000 |
| விற்பனைத் திருப்பம் | 5,000 |
| இறுதி பற்பல கடனாளிகள் | 75,000 |

8. **கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு 2004 ஆம் ஆண்டின் கடன் விற்பனை காண்க :**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| பற்பல கடனாளிகள் (1.4.2004) | 87,125 |
| பற்பல கடனாளிகள் (31.3.2005) | 76,500 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,46,000 |
| விற்பனைத் திருப்பம் | 18,500 |
| அனுமதித்த தள்ளுபடி | 9,000 |

9. **பற்பல கடனாளிகளின் இறுதி இருப்பைக் காண்க :**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| பற்பல கடனாளிகள் (தொடக்க இருப்பு) | 2,00,000 |
| கடன் விற்பனை | 7,00,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 3,00,000 |
| உள் திருப்பம் | 5,000 |

10. **கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு கடன் கொள்முதல் காண்க :**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| பற்பல கடனீந்தோர் (தொடக்கம்) | 75,000 |
| பற்பல கடனீந்தோர் (இறுதி) | 90,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 22,500 |
| பெற்ற தள்ளுபடி | 15,000 |
| கொள்முதல் திருப்பம் | 7,500 |

**11. கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு, பற்பல கடனாளிகளின் இறுதி இருப்பைக் காண்க :**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| பற்பல கடனாளிகள் (1.1.2000) | 17,425 |
| கடன் விற்பனை | 60,075 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 49,200 |
| விற்பனைத் திருப்பம் | 3,700 |
| அளித்த தள்ளுபடி | 4,300 |
| ரொக்க விற்பனை | 12,000 |

**12. இறுதி பற்பல கடனாளிகளைக் காண்க :**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| தொடக்க பற்பல கடனாளிகள் | 40,000 |
| மொத்த விற்பனை | 1,60,000 |
| ரொக்க விற்பனை | 20,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெறப்பட்ட ரொக்கம் | 78,000 |
| உள் திருப்பம் | 5,000 |

**13. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு பற்பல கடனீந்தோரின் இறுதி இருப்பைக் காண்க :**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| தொடக்க பற்பல கடனீந்தோர் | 19,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 40,000 |
| பெற்ற தள்ளுபடி | 1,000 |
| வெளித் திருப்பம் | 4,800 |
| கடன் கொள்முதல் | 51,200 |

**14. தேவையான கணக்குகள் தயார் செய்து மொத்த கொள்முதல் மற்றும் மொத்த விற்பனை காண்க :**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| தொடக்க பற்பல கடனாளிகள் | 1,00,000 |
| தொடக்க பற்பல கடனீந்தோர் | 65,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 5,90,000 |
| பெற்ற தள்ளுபடி | 3,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 40,000 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| வெளித்திருப்பம் | 10,000 |
| உள் திருப்பம் | 6,000 |
| இறுதி பற்பல கடனாளிகள் | 70,000 |
| இறுதி பற்பல கடனீந்தோர் | 50,000 |
| ரொக்க விற்பனை | 50,000 |
| ரொக்கக் கொள்முதல் | 25,000 |

**15.கீழ்க்காணும் விவரங்களைக்கொண்டு இறுதி பற்பலகடனாளிகளையும்,இறுதி பற்பலகடனீந்தோரையும் கணக்கிடுக**

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| 1.4.2002 அன்று பற்பல கடனாளிகள் | 30,000 |
| 1.4.2002 அன்று பற்பல கடனீந்தோர் | 41,000 |
| கடன் கொள்முதல் | 1,50,000 |
| கடன் விற்பனை | 1,70,000 |
| பெற்ற தள்ளுபடி | 5,000 |
| அளித்த தள்ளுபடி | 6,000 |
| கொள்முதல் திருப்பம் | 7,500 |
| விற்பனைத் திருப்பம் | 6,500 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 1,50,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 1,40,000 |

**16.கீழ்க்காணும் விவரங்களைக்கொண்டு சரிக்கட்டப்பட்ட இறுதி முதலைக் காண்க**

இறுதி முதல் ரூ.18000, எடுப்பு ரூ 3500, கூடுதல் முதல் ரூ. 4300

## IV.கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு இலாபமா நட்டமா காண்க:

**1.** திருமதி. ஷீலா ஒற்றைப் பதிவு முறையில் தனது கணக்கேடுகளை வைத்திருக்கிறார். அவர் ஏப்ரல் 1, 2002 அன்று ரூ.3,00,000 முதலுடன் தொழில் தொடங்கினார். மார்ச் 31, 2003 அன்று அவருடைய நிலை கீழ்க்கண்டவாறு இருந்தது.

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| கை ரொக்கம் | 8,000 |
| பற்பல கடனீந்தோர் | 50,000 |
| வங்கி ரொக்கம் | 20,000 |
| செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 10,000 |
| அறைகலன் | 40,000 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 8,000 |
| பொறியும், பொறித் தொகுதியும் | 2,00,000 |
| பற்பல கடனாளிகள் | 1,50,000 |
| சரக்கிருப்பு | 1,50,000 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 15,000 |

2002-2003 ஆம் ஆண்டில் திருமதி. ஷீலா பெற்ற இலாபம் அல்லது நட்டம் கணக்கிடுக.

**2.** திருமதி. ரேவதி ரூ.1,20,000 முதலுடன் 1.4.2003 அன்று தொழில் தொடங்கினார். அவர் ஒவ்வொரு மாதமும் ரூ.1,000 வீதம் தன் சொந்த செலவிற்கு எடுத்துக் கொண்டார். அவர் ரூ.20,000 கூடுதல் முதலாக இட்டார். அவருடைய 31.3.2004 அன்றைய நிலை கீழே தரப்பட்டுள்ளது :

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| வங்கி இருப்பு | 8,000 |
| சரக்கிருப்பு | 80,000 |
| பற்பல கடனாளிகள் | 50,000 |
| அறைகலன் | 2,500 |
| கை ரொக்கம் | 2,000 |
| பற்பல கடனீந்தோர் | 25,000 |
| கொடுபட வேண்டிய செலவுகள் | 1,000 |

அவர் தனது கணக்குகளை ஒற்றைப் பதிவு முறையில் பராமரித்து வருகிறார். 2003-04 ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

**3.** திரு. முரளி ஒற்றைப் பதிவு முறையில் தனது கணக்கேடுகளை வைத்திருக்கிறார். 31.3.2002 மற்றும் 31.3.2003 ஆகிய நாட்களில் அவரது சொத்துகளும், பொறுப்புகளும் கீழ்க்கண்டவாறு இருந்தன :

| விவரம் | 31.3.2002ரூ | 31.3.2003 ரூ |
|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 15,000 | 30,000 |
| அறைகலன் | 15,000 | 15,000 |
| பற்பல கடனாளிகள் | 75,000 | 1,00,000 |
| சரக்கிருப்பு | 35,000 | 50,000 |
| ரொக்க இருப்பு | 5,000 | 60,000 |

அவர் அவ்வாண்டில் ரூ.15,000 கூடுதல் முதல் இட்டார். அவர் தனது சொந்த செலவுக்காக ரூ.35,000 திரும்ப எடுத்துக் கொண்டார். 2002-03 ஆம் ஆண்டிற்கான அவரது இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

**4.**ஒற்றைப்பதிவு முறையில் கணக்கேடுகளைப் பராமரித்து வரும் திரு.பரணீதரனின் இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

| விவரம் | 1.4.2000ரூ | 31.3.2001 ரூ |
|---|---|---|
| அறைகலன் | 2,000 | 2,000 |
| சரக்கிருப்பு | 5,000 | 6,000 |
| பற்பல கடனாளிகள் | 6,000 | 4,000 |
| ரொக்கம் | 10,000 | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 2,000 | 3,500 |
| பெறுதற்குரிய மாற்றுச் சீட்டுகள் | 1,000 | 500 |
| கடன் (ப) | ---- | 1,000 |
| முதலீடுகள் | ---- | 4,000 |

அவ்வாண்டில் அவரது எடுப்பு ரூ.2,000. அறைகலன் மீது 10% தேய்மானம் அனுமதிக்க. பற்பல கடனாளிகள் மீது 5% வாரா ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக. 2000 ஆண்டிற்கான இலாபம் கண்டறியும் அறிக்கை தயார் செய்க.

**5.** திரு.விஜயன் தனது கணக்கேடுகளை ஒற்றைப்பதிவு முறையில் பராமரித்து வருகிறார். அவர் கீழ்க்காணும் தகவல்களைத் தருகிறார்.

| விவரம் | 01.04.01 ரூ | 31.03.02 ரூ |
|---|---|---|
| கை ரொக்கம் | 4000 | 6000 |
| வங்கி ரொக்கம் | 2000 | 4000 |
| சரக்கிருப்பு | 24000 | 24000 |
| அறைகலன் | 6000 | 10000 |
| பற்பல கடனாளிகள் | 20000 | 25000 |
| பற்பல கடனீந்தோர் | 10000 | 14000 |

அவர் தனது சொந்த செலவுகட்காக ரூ.4,000 திரும்ப எடுத்தார். அறைகலன் மீது 10% தேய்மானம் நீக்குக. 2001 ஆம் ஆண்டின் இலாபம் அல்லது நட்டத்தினை காட்டும் அறிக்கையினைத் தயார் செய்க.

குறிப்பு : தேய்மானத்தை ரூ.6,000க்கு 1 ஆண்டிற்கும், ரூ.4,000க்கு 6 மாதத்திற்கும் எனக் கணக்கிடுக.

**6.** ஒரு வியாபாரி உரிய பதிவேடுகளை வைத்திருக்கவில்லை. 31.03.2003 மற்றும் 31.3.2004 ஆகிய இரு நாட்களில் அவரது நிலை கீழ்க்கண்டவாறு இருந்தது :

| விவரம் | 31.03.03 ரூ | 31.03.04 ரூ |
|---|---|---|
| வங்கி இருப்பு | 75,000 | 50,000 |
| கை ரொக்கம் | 5,000 | 10,000 |
| சரக்கிருப்பு | 5,00,000 | 3,25,000 |
| பற்பல கடனாளிகள் | 2,00,000 | 4,00,000 |
| அறைகலன் | 50,000 | 50,000 |
| இயந்திரம் | 4,00,000 | 4,00,000 |
| பற்பல கடனீந்தோர் | 6,00,000 | 7,00,000 |

ஆண்டிடையில் ரூ.1,00,000 அவர் கூடுதல் முதலாக இட்டார். மாதந்தோறும் ரூ.10,000 வீதம் தனது சொந்த செலவுகளுக்கு எடுத்துக் கொண்டார். அறைகலன் மற்றும் இயந்திரம் மீது 10% தேய்மானம் விலக்கப்பட வேண்டும். 2004 மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

**7.** வாணி, வேணி என்ற இரு கூட்டாளிகள் இலாப, நட்டத்தை சமமாக பகிர்ந்து வந்தனர். அவர்களது கணக்கேடுகள் ஒற்றைப் பதிவு முறையில் பராமரிக்கப்பட்டு வந்தன. 31.3.2002அன்று அவர்களது நிலை கீழ்க்கண்டவாறு இருந்தது

| பொறுப்புகள் | தொகை ரூ | சொத்துகள் | தொகை ரூ |
|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 1,00,000 | வங்கி ரொக்கம் | 40,000 |
| கடன் | 40,000 | பற்பல கடனாளிகள் | 1,60,000 |
| முதல் :<br>வாணி 80,000<br>வேணி <u>80,000</u> | 160000 | சரக்கிருப்பு | 40,000 |
| | | பொறியும், பொறித் தொகுதியும் | 60,000 |
| | 3,00,000 | | 3,00,000 |

31.3.2003 அன்று அந்நிறுவனத்தின் நிலை கீழ்க்கண்டவாறு இருந்தது.

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| பற்பல கடனீந்தோர் | 1,20,000 |
| சரக்கிருப்பு | 80,000 |
| பொறியும், பொறித் தொகுதியும் | 1,00,000 |
| பற்பல கடனாளிகள் | 1,50,000 |
| வங்கி ரொக்கம் | 60,000 |

பொறியும் பொறித்தொகுதி மீது 10% தேய்மானம் விலக்கப்பட வேண்டும். எடுப்பு : வாணி ரூ.10,000 ; வேணி ரூ.6,000 ; 2002-03ஆம் ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.

## V.இறுதிக் கணக்கு தயாரிக்கவும்

**1.** 1.4.2003 அன்று திரு.கண்ணன் ரூ.2,62,500 முதல் வைத்து வியாபாரம் தொடங்கினார். அவர் ரூ.42,000 மதிப்புள்ள அறைகலன் வாங்கினார். அவர் வங்கியிலிருந்து ரூ.52,500 கடன் பெற்றார். தனது சொந்த செலவுகளுக்காக அவர் எடுத்த தொகை ரூ.75,600. கீழ்க்கண்ட விவரங்களைக் கொண்டு 2004, மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்குக்கும், இருப்பு நிலைக் குறிப்பும் தயார் செய்க :

| விவரம் | தொகை ரூ |
|---|---|
| கடன் விற்பனை | 7,00,000 |
| ரொக்க விற்பனை | 3,50,000 |
| கடன் கொள்முதல் | 7,87,500 |

| | |
|---|---|
| ரொக்கக் கொள்முதல் | 1,40,000 |
| கூலி | 15,750 |
| அளித்த தள்ளுபடி | 3,500 |
| சம்பளம் | 17,500 |
| வியாபாரச் செலவுகள் | 14,000 |
| விளம்பரம் | 17,500 |
| பற்பல கடனாளிகள் (இறுதி இருப்பு) | 2,62,500 |
| பற்பல கடனீந்தோர் (இறுதி இருப்பு) | 1,75,000 |
| சரக்கிருப்பு (இறுதி இருப்பு) | 1,22,500 |
| ரொக்கம் (இறுதி இருப்பு) | 1,64,150 |

அறைகலன் மீது 10% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

**2.** திருமதி. பிரமீளா, தனது கணக்கேடுகளை ஒற்றைப் பதிவு முறையில் வைத்திருக்கிறார். கீழ்க்காணும் தகவல்களைக் கொண்டு 2003 மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபாரக் கணக்கு, இலாபம் நட்டக் கணக்கு மற்றும் அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பும் தயார் செய்க. இயந்திரம் மீது தேடீநுமானம் 10% விலக்கப்பட வேண்டும்.

**ரொக்க ஏடு**

| பெறுதல்கள் | தொகை ரூ | செலுத்தல்கள் | தொகை ரூ |
|---|---|---|---|
| இருப்பு கீ/கொ | 16,000 | (ரொக்க) கொள்முதல் | 28,000 |
| (ரொக்க) விற்பனை | 80,000 | பற்பல கடனீந்தோர் | 40,000 |
| பற்பல கடனாளிகள் | 60,000 | பொதுச் செலவுகள் | 12,000 |
| | | கூலி | 4,000 |
| | | எடுப்புகள் | 16,000 |
| | | இருப்பு கீ/இ | 56,000 |
| | **1,56,000** | | **1,56,000** |

**பிற தகவல்கள் :**

| விவரம் | 31.03.02 ரூ | 31.03.03 ரூ |
|---|---|---|
| பற்பல கடனாளிகள் | 18,000 | ? |
| பற்பல கடனீந்தோர் | 28,800 | ? |
| சரக்கிருப்பு | 20,000 | 32,000 |
| இயந்திரம் | 80,000 | 80,000 |
| அறைகலன் | 6,000 | 6,000 |

**கூடுதல் தகவல்கள் :**

அளித்த தள்ளுபடி ரூ. 2,800
பெற்ற தள்ளுபடி ரூ. 3,400
கடன் விற்பனை ரூ. 68,800
கடன் கொள்முதல் ரூ. 28,200

**3.** கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு 2004 மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க :

| விவரம் | 1.04.03 ரூ | 31.03.04 ரூ |
|---|---|---|
| சரக்கிருப்பு | 50,000 | 25,000 |
| பற்பல கடனாளிகள் | 1,25,000 | 1,75,000 |
| அறைகலன் | 5,000 | 5,000 |
| ரொக்கம் | 12,500 | 20,000 |
| பற்பல கடனீந்தோர் | 75,000 | 87,500 |

| **மற்ற விவரங்கள் :** | **ரூ** |
|---|---|
| பெற்ற தள்ளுபடி | 7,500 |
| அளித்த தள்ளுபடி | 5,000 |
| பல்வகைச் செலவுகள் | 15,000 |
| பற்பல கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 2,25,000 |
| பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் | 2,67,500 |
| எடுப்புகள் | 20,000 |
| விற்பனைத் திருப்பம் | 7,500 |
| கொள்முதல் திருப்பம் | 2,500 |

அறைகலன் மீது 5% தேய்மானம் நீக்குக.

**4.** கீழ்க்காணும் விவரங்களைக் கொண்டு 1998 மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க :

| விவரம் | 1.04.97 ரூ | 31.03.98 ரூ |
|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | 37,500 | 43,750 |
| அறைகலன் | 2,500 | 2,500 |
| ரொக்கம் | 6,250 | 10,000 |
| பற்பல கடனாளிகள் | 62,500 | 87,500 |
| சரக்கிருப்பு | 25,000 | 12,500 |

**மற்ற விவரங்கள் :** **ரூ.**

எடுப்புகள் 10,000
பெற்ற தள்ளுபடி 3,750
அளித்த தள்ளுபடி 2,500
பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் 1,35,000
கடனீந்தோருக்குச் செலுத்திய ரொக்கம் 1,12,500
விற்பனைத் திருப்பம் 3,750
கொள்முதல் திருப்பம் 1,250
பல்வகைச் செலவுகள் கொடுத்தது 8,750

அறைகலன் மீது 5% தேய்மானம் நீக்கப்பட வேண்டும்.

**5.** திரு. இரவி சங்கரின் ஏடுகள் 2000 ஏப்ரல் 1 அன்று காட்டும் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| பொறுப்புகள் | தொகை ரூ | சொத்துகள் | தொகை ரூ |
|---|---|---|---|
| முதல் | 83,030 | நற்பெயர் | 18,540 |
| பற்பல கடனீந்தோர் | 9,010 | அறைகலன் | 14,010 |
| | | பற்பல கடனாளிகள் | 46,830 |
| | | வங்கி ரொக்கம் | 12,660 |
| | **92,040** | | **92,040** |

**பிற தகவல்கள் :** **ரூ.**

பற்பல கடனாளிகளிடமிருந்து பெற்ற ரொக்கம் 2,12,460
எடுப்புகள் 81,600
சம்பளம் கொடுத்தது 18,300
வாடகை கொடுத்துத 9,450
பற்பல கடனீந்தோருக்கு அளித்தது 90,360
பல்வகைச் செலவுகள் செலுத்தியது 3,840
சரக்கிருப்பு (31.3.2001) 32,000
பற்பல கடனாளிகள் (31.3.2001) 56,700
பற்பல கடனீந்தோர் (31.3.2001) 16,000
வங்கி ரொக்கம் (31.3.2001) 21,570

2001 மார்ச் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார, இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்பு நிலைக் குறிப்பையும் தயார் செய்க.